உ

ஓம்.

குஹாயநம:

# ஸ்ரீகச்சியப்பசிவாசாரியர் புரா ணம்.

திருக்கைலாயபரம்பரை மறைஞானசம் சைவாசாரிய
மரபினருள் ஒரு ய

சிதம்

வா தேவ

முரு பட்டாரகரவர்கள்

இயற்றியது.

இஃது

டியார் குமாரரும் சிதம்பரம் செந்தமிழ்ச்சங்கவித்துவானும்
டவுன்ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதருமாகிய

மு. மாணிக்கபட்டாரகரவர்களால்

திருச்சிற்றம்பலம்

S. ஆ. பொன்னுசாமிப்பிள்ளையவர்களின்

வேண்டுகோளின்படி

சிதம்பரம்

ஸ்ரீகுஞ்சிதசரண அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

10—9—1917.

இதன் விலை] [அமிழ்ச்செய்

றனந்த
த் தருக
வாருக:—

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRA
TIRUVANMIYUR :: MADRAS



ஸ்ரீகச்சியப்பசிவாசாரிய
சுவாமிகள்.

ஓம்.

குஹாயநம:

இந்நூலாசிரியர் திருக்கைலாய பரம்பரை சிதம்பரம், வாமதேவ மறைஞானசம்பந்தசைவாசாரிய மரபினராவர்.

இவர் தந்தையார் பொன்னுபட்டாரகர் என்பவர்.

இவர் கல்வி, அறிவு, சிவபக்தி, அடியார்பக்தி முதலிய நற்குணச் சிறப்புடையரென்பது இவரியற்றிய சங்கர ஞசாரியர் புராணமுதலிய நூல்களானினிது விளங்கும்.

இவர் சிவஸ்தல யாத்திரையை மேற்கொண்டு, தமிழ் நாட்டிலுள்ள சிவஸ்தலங்கடோறுஞ் சென்று, சிவபுராண படனஞ்செய்து, ஆங்காங்குள்ள சிவபக்த சிரோன்மணி களுக்குச் சிவானந்தப் பெருக்கை விளைவித்தவர். இவர் தாங்கொண்ட பெயருக்கேற்ப, முருகவேளிடத்து மெய் யன்புடையராய்ச் சிவபுராணோத் கிருஷ்டமாகிய ஸ்கந்த புராணபடனஞ் செய்யுங்கால் அதனைத் தமிழின் மொழி பெயர்த்த, ஸ்ரீகச்சியப்பசிவாசாரியர் செய்யுட்களின் சொற் சுவை, பொருட்சுவைகளையும், அவர் ஷண்முகப்பெரு மான் அனுக்கிரகம் பெற்றமையையும் இடை இடையே வியந்து பாராட்டும் பெற்றியினராவர்.

இதனையறிந்த சிரவணானந்த மெய்யன்பினருட் சிலர், அக்கச்சியப்ப சிவாசாரியருடைய திவ்விய சரித்திராமிர் தத்தை, செந்தமிழ்ச் செய்யுளின் வடிவாற் சிரவணானந்த முற விழைகின்றனம். அஃதை அவ்வாறியற்றித் தருக வெனவேண்டினமையின் இவர் இந்நூலை செந்தமிழ்ச்செய் யுள்வடிவினிற் செய்து முடித்தனர். இஃதிவ்வாறாக:—

ந்நூலாசிரியர் குமாரர் மாணிக்கபட்டாரகரவர்க
ர யானும் வேதாரணியம் எனதன்பின் மிக்க
அருணாசலதேசிகர் அவர்களும் ஸ்கந்தபுராணத்
லசெய்யுட்களின் பொருளமைதியைப்பற்றி உசா
ரது அவர்கள் அவற்றை நன்குணர்த்திய பின்னர்,
சியப்பசிவாசாரியர் ஷண்முகானுக்கிரகம் பெற்ற
தகையாரெனவும், இவர் திருவாக்கிற் பிறந்த ஸ்கந்த
த்தின் யேனைய செய்யுட்களின் பொருளமதிகளும்
றே இனிமை பயக்குமெனவும் கூறி, தந்தையா
ய ஸ்ரீகச்சியப்பசிவாசாரியர் புராணச் செய்யுட்க
லவற்றை வாசித்து அவற்றின் மெய்ப்பொருள்களை
ித்துணர்த்தினர்.

ப்பொழுது ஷண்முகப்பெருமானின் திருவருட்
மயும் அப்பெருமானிடத் தன்புபூண்ட ஸ்ரீகச்சி
வாசாரியரின் பக்திவன்மையும் எனக்குப் பேரான
பெருக்கை விளைத்தமையானும், எனதன்புரிமை
அருணாசலதேசிகர் அவர்கள் தாமும் அப்பேரா
ந்தை அனுபவித்து "இதுபோன்றெவரும் இப்பே
கமுறுமாறு இதனையச்சிட்டு வெளியிடுக" என என்
ிரேரித்தமையானும், இதனை அச்சிடுவித்தேன்.

)ந்நூலைப்பெறும் மெய்யன்பர்களனைவரும் இதன்
சுவை, பொருட்சுவைகளை ஆராய்ந்தறிந்து பேரா
பெருஞ்செல்வமுறுமாறு வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,

S. P. பொன்னுசாமிப்பிள்ளை,

திருச்சிற்றம்பலம், மாயவரம்தாலுக்கா.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# கச்சியப்பசிவாசாரியர் புராணம்.

## காப்பு.

தம்மறு முகத்தம்பி தமிழ்ப்பு ராணஞ்செ
யம்மறு வறுகச்சி யப்ப தேசிக
நம்மவர் சரிதையா நவிற்ற வப்பெரு
மும்மதக் களிற்றுமா முகவர்ப் போற்றுவாம்.

சக்க ரம்பயில் வேணிக ருமைதரு குமரன்
சக்க ரம்பெறு பண்ணவ னறிவருஞ் சரணன்
சக்க ரம்படை கரனெழிற் காஞ்சிசார் விகட
சக்க ரன்றுணை மலர்க்கழ லன்பொடு சார்வாம்.

# கடவுள்வாழ்த்து.

## சபாநாயகர்.

வலம்புரி மிடற்றுத் தேவி யிடமுற மன்றுண் ஞான
நலம்புரி வியாள யோகர் வரத்தினி ஞளு மிந்த
நிலம்புரி தவத்தான் மிக்க வானந்த நிருத்தஞ் செய்யுங்
குலம்புரி தேவ தேவ னடிமலர் குறித்து வாழ்வாம்.

## சிவகாமசுந்தரியம்மை.

தாமரைக் கணாறொடு தன்றன் காதல
ஞமர னுருவுதித் தவன்வ லத்தரி
வாமமுற் றிட வுற வாம மார்சிவ
காமசுந் தரிமலர்க் கழல்க ளேத்துவாம். ௨

## ஏகாம்பரநாதர்.

தம்ப மேவுதந் திக்கரு ளரிக்ககப் படாது
விம்ப மேவுசெவ் விதழ்க்கரு விழியிணைக் கொங்கைக்
கும்ப மேவுகா மக்கணி தழுவிடக் குழைந்தே
கம்ப மேவுறு மிறையவன் கான்மலர் தொழுவாம். ௩

## காமாக்ஷியம்மை.

கோட்ட முற்றிட வின்மனத் தந்தணர் குழுமிக்
கோட்ட முற்றினு முயர்வுடைத் தெனக்குறி தொண்டைக்
கோட்ட முற்றுநல் லணிகொளக் காஞ்சியுட் காமக்
கோட்ட முற்றுவா ழம்பிகை பதங்களுட் கொள்வாம். ௪

## கற்பகவிநாயகர்.

விதிபுலி நகர்த்தளி மேலைக் கோபுரத்
ததிபுகழ் கீழ்முக மாக வேலவன்
பதிதர மேற்றிசை பார்த்து யிர்க்கெலாங்
கதிதரு கற்பகக் களிற்றைப் போற்றுவாம். ௫

## சுப்பிரமணியர்.

புலவர் தம்பகை வாட்டிய வேல்கொடு புவிக்க
ணுலவு மெம்பகை யெவற்றையு மொறுத்திட வுன்னி

நிலவு மூவிரு முகமுடை நிருமலக் கொழுந்தி
னலரு றுந்திருத் தாண்மலர் முடியுற வணிவாம். ௬

## விகடசக்கரவிநாயகர்.

வடசக் கரன்மரு மகன முற்பெறு
திடசக் கரனரு டெள்ளி யாருமா
நடசக் கரமிகு நுதிகொள் காஞ்சிவி
கடசக் கரன்மலர்க் கழலர்க ளேத்துவாம். ௭

## குமரகோட்டத்தறுமுகக்கடவுள்.

சரக்கோட்ட மனகருங்கட் டையலொரு பாகத்துச்
சிரக்கோட்ட முறுதிங்கட் செஞ்சடையா னீன்றருளெவ்
வரக்கோட்ட நகர்களினு மகிமைபெறு கச்சியுட்கு
மரக்கோட்ட மருவுமறு மாமுகனைப் போற்றிடுவாம். ௮

## வீரவாகுதேவர்.

தந்தைதன் றனக்கு முந்தித் தந்தருள் வாள்கொண் டந்தப்
புந்தியி லிரவித் தெவ்வாம் புரைகெழு மவுணன் யாக்கை
சிந்திநாற் றுண்ட மாகத் திருநெடு வேலோ னல்கு
மைந்துறுவரங்கொள்வீர வாகுவைமனத்துட்கொள்வாம்.

## சமயகுரவர்கள்.

வெள்ளங்கம் பூம்பாவை விதித்தபிரான் கழல்போற்றி
யுள்ளங்க மொளிர்சூலத் துறுகுறியார் பதம்போற்றி
கள்ளங்க ளகல்பரவை காதலர்த மடிபோற்றி
நள்ளங்க முறுதிருவா சகநவின்றூர் சரண்போற்றி. ௰

## திருத்தொண்டர்கள்.

நம்பியா ரூரர்புக ழற்றிருத்தொண் டத்தொகைக்குப்
பம்புமெழின் முனையாகிப் பகர்நம்பி யாண்டார்சொற்
கும்பர்புகழ் புதராகி யொளிவளர்சேக் கிழார்மொழிக்குச்
செம்பொருணல் லருட்டருவாந் திருத்தொண்டர் பதம்போற்றி. ௰௧

## கச்சியப்பசிவாசாரியர்.

ஒப்பறு சூர்முத லுடலங் கீறிய
மெய்ப்படு வேற்படை வீரன் மாக்கதை
தப்பறு தமிழினாற் றந்த சீர்க்கச்சி
யப்பசற் குருபத மகத்துட் போற்றுவாம். ௰௨

## அகோரசிவாசாரியர்.

தன்னுரைக்கதிராலாகமவெளியிற் றற்பரசிவன்முதற்பொருளின்
முன்னுருக்கிரமமதனையஞ்ஞானமுழுவிருளகற்றித்தீக்கையின்மேன்
மன்னினர்க்குணர்த்தவிளக்கிடுபுலியூர் வருமருட்குரவனொன்றுரைசீர்
துன்னியவகோரசிவதினகரனைத்தொலைவிலன்புடனிதந்தொழுவாம்.

## நூற்பெயர்.

பாரியமெய் யறிவுடைய பண்டிதர்கொண் டாடுகின்ற
சீரியவிப் புராணத்தின் றிருநாம மிடைவழுவா
நாரியனு மடியருள நண்ணுகச்சி யப்பசிவா
சாரியர்பு ராணமெனச் சாற்றுகவிவ் விருநிலனே. ௰௪

## அவையடக்கம்.

பொன்முடி பழந்துணி பொன்னிற் கொள்ளவை
மின்முடி வேற்படை விமலன் மெய்ப்புகழ்

தென்மொழி யதிற்புகல் செல்வன் சீரினை
யென்மொழி யையுங்கொளு மியல்புண் டாகுமால். ௰௫

## சிறப்புப்பாயிரம்.

திருநெடுவே யிறைகந்த புராணமதைச் செந்தமிழிற் செய்து தந்த
பொருவறுமெய்க் கச்சியப்ப சிவன்புகழைப் பைந்தமிழிற் புகன்று த
மருவுறுதில் லைப்பதிவாழ் மறைஞான குரவன்வரு வாமதேவ[ந்தான்
குருவளர்தொன்மாபுதித்தமுருகபட்டாரகனென்னுங்குரிசின்மாதோ

கடவுள்வாழ்த்து முற்றிற்று.

ஆக செய்யுள் ௰௬.

# நூல்

தொண்டலத் தொடைத்திருத் துணைவ னேமுதல்
விண்டலத் தமரரு ளனந்த வெவ்வராக்
குண்டலக் குழையுடைக் குன்ற வில்லிபோன்
மண்டலத் துயர்ந்தது தொண்டை மண்டலம். ௧

சேக்கிழார் கலியனார் திருக்கு றிப்பினார்
மேக்குறு பூசலார் விழையும் வாயிலார்
தேக்குமை யடிகளார் திகழு மூர்க்கனார்
ஆக்கமோ டுதித்தரு ளடைந்த நாடிதால். ௨

இடையிலான் றேருடைத் தென்ன நாமக
ளுடையதொல் வடிவமென் றோது மவ்வைதன்
றொடையதி னுரைத்தவித் தொண்டை நாட்டினைக்
கடையனே னுரைக்கவுங் கருத லாகுமோ. ௩

நந்தியஞ் சிலம்பிழி நதிய பாலியுற்
றுந்தியங் நதிச்சுழி யொக்கு மம்பிகை

புந்தியிற் புரியறம் பொருவ ரன்பதி
தந்திடு நாடெனுந் தண்ட கத்ததோ. ௪

தன்னையொப் பரியது தவத்தின் மேலது
பின்னைவை குறுவது பெருக்க முள்ளது
துன்னயர் வொழிவது தூய்மை பெற்றது
நன்னய முறுவது நகருட் காஞ்சியே. ௫

இன்னநற் புராணமா மிதற்கு நாயகன்
றன்னறி வாற்புகழ் தருமொர் காஞ்சியா
மன்னதற் கதுநிக ராகு மற்றிலை
யென்னின்யா னிகரினி யியம்ப வல்லனே. ௬

தேமிகு மறையுடன் சிவாக மக்குறி
போமித யத்திடைப் பொருந்தத் தேவியி
னேமியை முலைக்குறி யெய்தி வைகுமோ
ராமிர வடியர னமரக் காஞ்சியில். ௭

வேறு.

இலங்குவிண் ணோருண்முக்க ணிறைவனுமிமையமுந் நூலுட்
கலங்கறி வகற்றுஞ் சைவா கமமுமந் திரங்க ளுள்ளே
வலங்கொளைந் தெழுத்து மேபோல் வளர்புகழ் கொண்டு
குலங்களுளாதிசைவ குலமிகச்சிறந்ததன்றே. [மேவுங் ௮

அகாரமு னநாதி சைவ மாதிசை வத்தி னோடு
மகாசைவ மனுசை வஞ்சீர் மருவவாந் தரசை வம்பின்
றொகாதபி ரவர சைவந் தொடருமந் தியசை வம்மென்
றிகாதமெய் யிவ்வேழ்சைவத் திரண்டதாஞ்சைவமீதால். ௯

அடைதரு மநாதி சைவ ராகிய சதேச மூர்த்தி
யுடையசத் தியோசா தஞ்சீ ருறுவாம தேவ மேன்மை

படையகோ ரத்தி னோடு பகருந்தற் புருட முச்சி
யிடையம ரீசா னம்மென் றியம்புமை முகங்க ணின்றும். ௰

தீத்திற னறத்தோன் றுங்கோ சிகனெழிற் காசி பன்சீர்
மூத்திடு பரத்து வாசன் மொழிகவு தமனமெய்ம் மேன்மை
யேத்திய குறுமெய் யோக னெனுமிவைந் திருடி யோர்தங்
கோத்திரமிந்தத்தெய்வ குலத்தின்கோத்திரமதாமால். ௰௧

அழனிவந் தன்ன செங்கே ழவிர்சடை முதல்வன் மெய்யி
னிழலெனு நாம மேவி நிகழுமத் தேவ தேவன் [குப்
குழகுறு மடியெ டுத்துக் கொடுத்ததொண் டத்தொ கைக்
பழமைவித்தாகுஞ்சைவப் பரமன்வாழ் குலமு மீதால். ௰௨

செருவிலி புத்தூர் மன்னித் திகழ்புகழ்த் துணையார்செல்வ
மருவிசை ஞானி யார்நின் மலமுறு சடைய னார்மெய்த்
திருவின்முப் போது மேனி தீண்டுவா ரின்னோர் மாயை
யொருவுமெய்யன்பின்முன்ன ருதித்ததொல்குலமுமீதால்.

சடங்கவி யாரென் றோதத் தகுமவ ரோடி யாரு
மடங்குசி வகோச னார்சீர் வருணர்வா கீச ருண்மை
தொடங்குமுத் துங்கர் மேலோர் துதிபெறு பிரமசம்பு
தடங்கட லுலகி லின்னோர் தனித்துதி குலமு மீதால். ௰௪

இப்புவி யெங்கு மேன்மை யியைதர வடநூற் சித்தாந்
தப்பிர காசி கைப்போர்த் தனைநிக ரதனைச் செய்த
வொப்பினற் சருவான் மாமுன் னுளசம்பு தானு மெய்தி
மெய்ப்படவவதாரஞ்செய் விழுப்பெருங் குலமுமீதால். ௰௫

குருகெயி னம்பி யாண்டார் கூரரு ணந்தி யோடு
மருவுறு நீல கண்டர் வளர்புகழ்ச் சோம சம்பு

திருமலி யகோர வாசான் றிரிலோச நசிவ ஞாதிப் [ல்.
பெருகுமெய்க் குரவர் பல்லோர் பிறந்தெதால் குலமு மீதா

வேறு.

அப்பெ ரும்புகழ்க் குலமெனு மம்புரா சிக்கோ
ரொப்பின் மாமதி யென்னவந் தவதரித் துள்ளோர்
செப்ப ருங்கலை யாவையுந் தெரிந்துளோ ரவற்றுண்
மெய்ப்ப டும்விதி யேபுரிந் தொழுகுமே னிலையோர். ௧௭

முப்பு ரத்தைமுன் முறுவல்செய் தழற்கட வுட்குத்
துப்பெ னத்தரு பரன்கழற் கன்புசெய் தொழும்போர்
வைப்பெ னுஞ்சிவ ஞானத்தோர் வளங்கொள்கா ளத்தி
யப்ப தேசிக நாமத்தோ ரளவில்பல் புகழோர். ௧௮

நாட்டத் தற்புள்சான் றேருறை காஞ்சிநன் னகர்வா
யீட்டத் தக்கபல் வளமுடைச் சூரிற வடிவே
லோட்டத் தற்பர னுயிர்க்கருள் புரிந்துவாழ் குமர
கோட்டத் தர்ச்சகரனேகருளொருவராய்க்குறிப்போர். ௧௯

நேய மிக்கவவ் வருச்சகர் நெடும்பொழு தம்பொற்
சேய தாமரைச் சீறடிக் குமுதவாய் மழலைத்
தூய மைக்கண்மா மைந்தரில் லாமையாற் றுளங்கிப்
பாய வெங்கவ லைக்கடற் பட்டுவா டினரால் உ௰

கறைய கற்றுநற் புத்திர பாக்கியங் கருதி
யறைத ரும்புகழ்க் குமரகோட் டத்தறு முகத்து
நிறைபெ ருங்கரு ணைக்கட லாகுநின் மலனை
முறைமை யால்விசு வசிப்புடன் வழிபடன் முயன்றார். உ௧

முயன்ற காலையி லப்பெரு முதல்வனல் லருளா
லியன்ற தண்டமிழ் நாட்டகத் தியாவரு மெழில்சேர்

வியன்ற ளிப்புய மாறிரண் டுடையன்மெய் யன்பாம்
பயன்றி ளைத்தறி வாநந்தப் பரவைபெற் றுயவே. (உ௨)

அச்சி வத்தனிக் குரவருக் கவர்மணக் கற்பின்
வைச்சி லங்கிமேம் பட்டவ ருருவயிற் றெருசே
யிச்சி வெண்சுவைப் பாற்கடற் கமுதென வுதித்தார்
கச்சி யப்பரென் றவர்பெயர்க் கரணமுற் றருளின். [உ௩]

வேறு.

பம்புசெங் கீரை தால்சப் பாணிமுத் தம்வா ரானை
யம்புலி சிற்றி லோடவ் வறைசிறு பறைதான் மற்றை
நம்புறு சிறுதே ரென்ன நவிற்றுமிவ் விளையாட் டெல்லா
மிம்பரிற் பருவந் தோறு மியற்றுத லெய்தப் பெற்றார். ( )

வேறு.

பெற்ற வத்திருக் குமரரை யாண்டினிற் பெருமை
யுற்ற பள்ளியிற் கல்விகற் பிக்கப்புக் கொழியாப்
பற்று மேவுநல் வடமொழி தன்னையும் பயிலு
மற்றை வண்டமிழ் மொழியையுங் கற்பவ ராஞர். (உ௫

அன்பும்வாய்மையும்பொறையும்பல் லுயிர்கண்மேலருளுந்
துன்ப மேவுதீ நெறிக்கட்செல் லாதுட லகற்றுசொல்
லென்ப காத்தலு மாதிநற் குணங்களெல் லாமு
மின்ப மோடவ ருடனுதித் துடன்வளர்ந் திருந்த. (உ௬)

மழவு ருப்பெறு பெருந்தகை யியல்பின்மற் றவர்தாங்
கிழமை பெற்றவே ழாண்டினிற் கிளருமுப் புரிநூல்
விழவு பெற்றுமுன் னவர்க்குமுன் னுயிரேன் விளம்பும்
பழமறைத்தொட்ர் பியாவையும் பயின்றனர்மரபால். (உ௭)

வடமொ ழிக்கண்மா மறையுமங் கமும்வனத் தகிரா
விடமொ ழிக்கணல் லிலக்கண விலக்கிய மும்மேற்
படவ றிந்துசில் போதினிற் பயின்றுமற் றவற்றுட்
டிடமு றத்தனி வண்மைய ராயினர் தெளிந்து. (௨௮)

யாக்கை மேத்திய ராய்ச்சில நாளிறச் சைவ
தீக்கை மேவிச்செந் தமிழ்மறை யாயதே வார
வாக்கை யாதலு மடிகடம் வாக்கையே போதி
நாக்கை யேற்றதொல் பயனடைந் தாரவர் நலத்தால். (௨௯)

நாட லாவதில் லாதவர் நலமுற்ற பினும்வி
சேட தீக்கைபெற் றிறைவனீ சானவத் திரத்தா
லாட னின்றசை வாகம கிரியைக ளடங்கும்
பீட மைந்தயல் காண்டங்கற் றறிந்தனர் பெரிதே. (௩௰)

நீண லம்பெறு மவற்றினை யறிந்திடு பின்னிர்
வாண தீக்கையா சாரிய பிடேகநல் வளத்தோ
டேண மாகப்பெற் றளவில்லை யாகமத் திலங்கிக்
காண லாயஞா னகாண்டங்கள் கருத்துறப் பயின்று. (௩௧)

அவற்றின் மெய்ப்பொரு ளனைத்தையு மம்பிகை ஞான
மெவற்றை யும்முன முண்டரு ளிறைவர்சம் பந்தர்
தவற்றை நீக்குவா கிசர்சுந் தரர்தமிழ்ப் பொருளா
மிவற்றை யுந்திரு வாசகத் திருப்பையுங் கேட்டு. (௩௨)

அப்பெ ரும்பொரு ளாரணக் காரணப் பொருளோ
டொப்ப நாடவே யபேதமா யிருக்கக்கண் டுணர்ந்து
வைப்பெ னத்திக ழதனைத்தம் மனத்திற்சிந் தித்துத்
அப்பு றத்தெளி வாகவே துணிந்துகொண் டனரால். (௩௩)

அணிந்து மற்றவர் தம்புடைக் குழீஇய தொழும்பாய்
பணிந்து நின்றுமெய் யன்புறு மாணவர் பவங்க
டணிந்து போம்படி திருவரு ளுறுவகற் குரிமை
யணிந்துநின் றுபல்கலையெலா மவர்க்குரைத் தமர்வார். (௩௪)

வேறு.

இவ்வியல் புடைய ராகி யிலங்குகச் சியப்ப ரென்னுந்
திவ்வியகுரவர்மெய்ம்மை சேர்ந்தவன் புடனெஞ்ஞான் றுஞ்
செவ்விய குமர கோட்டஞ் செறிந்துவா ழறுமு கத்துக்
குவ்வியப் புற்ற பெம்மான் குரைகழலர்ச்சிப்பாரால். (௩௫)

ஒருபக லயில்வே லண்ண லுள்ளுநர்க் கருளு மெய்யோ
டருளுறு குரவர் கச்சி யப்பர்தங் கனவிற் றோன்றி
யிருளக லன்ப னேநீ யிரும்பொருட் காந்தத் துற்ற
பெருமையுளிருமூன்றென்னப் பேசுசங்கிதையின்மாதோ.

திகழ்ந்தசாங் கரத்தின் முன்னுஞ் சிவரக சியகண் டத்துட்
புகழ்ந்தநஞ் சரிதை கந்த புராணமாம் பெயரி னோடு
நிகழ்ந்துறத் தமிழி னூலே நெடும்பெருங் காப்பி யம்மா
பகிழ்ந்திடப் பாடு கென்ன மனங்கொளா வாஞ்ஞா பித்து.

வேறு.

“திகட சக்கரச் செம்முக மைந்துளா” னென்னப்
பகட மைந்தவிவ் வடி திரு வாக்கினாற் பகர்ந்து
துகட விர்ந்திட வுணர்த்திப்பின் றுலங்கறி வோர்க
ளுகட னித்தவின் பக்கட லுருமறைந் திட்டான். (௩௮)

ஆய வேலையி னவர்விழித் தெழுந்துசெந் தீயின்
மேய தோர்மெழு கெனவுள முருகிட மெய்யிற்

றாய ரோமங்கள் சிலிர்த்திடச் சொற்றடு மாறப்
பாய தொல்கரை நீங்குமின் பக்கடற் படிந்து. (௩௯)

ஒன்றி னுக்கும்பற் றுதபுன் புழுத்தலை யுதிரச்
சென்று லைந்தநா யினுஞ்சிறு கடையனு மெனையு
மின்று தானொரு பொருட்படுத் தெழுந்துவந் தருள்செய்
வென்றி வேற்படை யவனரு ளிருந்தவா றென்னே. (௪0)

என்ன வானந்தக் கூத்திழைத் தாரவ ரிதயப்
பொன்ன வாங்கடற் கறுமுகப் புனிதன்வந் ததுபோ
லன்ன வால்வனக் கடலகத் தாயிரங் கதிரோ
னன்ன ராகவே வந்தன னடந்தது கங்குல். (௪௧)

வேறு.

அத்தி னத்தவ ரார்வுற
நித்தி யக்கட னேர்வுறீஇப்
புத்தி யிற்குக பூசைமெய்ப்
பத்தி யோடு பயின்றபின். (௪உ)

நலமு ளங்கைமுந் நான்கினு
னலரு ருட்கொ டமைத்திட
வலமை யோடுது வக்கினர்
புலமை மேவு புராணமே. (௪௩)

செய்யு ளூறு தினந்தொறு
மையெ னப்பகர்ந் தம்பொறி
கையி லேடுநீள் கண்டமுந்
தெய்ய பூசையல் செய்தபின். (௪௪)

ஞான கோடக தமாந்தநங்
ஞான மென்னுந் நெறிநிறை
னமரர் நாத னெழுக்கினா
யான வேவைத்து வாம்பினா. (சரு)

மாற்றி றின்கத வைத்தினை
யாற்றிக் காப்பாரி னென்னலைக்
தேற்றி யுற்றதந் சிந்தையிற்
போற்றி மாளிகை போவரால். (சசு)

பிற்றை யெல்லைமுற் பெருகொன்
னற்றை நித்திய மாகிய
வொற்றை நல்விதி பொய்பெனா
முற்றை மேவ முடித்தரோ. (சஎ)

பூசை யாற்றிய பொன்மயத்
தேசை விசநற் சேதிமத்
தாசை யோடு ளிணைக்கெடுத்
தோசை யெடுபார்த் தாற்றரோ. (சஅ)

இன்ன திற்சி விடங்களிற்
சின்ன மாத்திருத் தப்படி
மன்ன னைதக்கண் ணுற் றன்புடன்
மன்ன வேசிரம் வைத்தரோ. (சகூ)

வசன மின்றியேல் லையினை
நிசமு ளானந்த நீள்பர
வசம தாகிய வண்ணிலை இ
யசநம் பின் (ருய)

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS

வேறு.

அறையுமிவ் வணங்கச்சி யப்ப நாயனு
ரிறைமைகொண் முருகவே ளெழிற்ச ரித்திரப்
பொறைகெழு புகழ்க்கந்த புராணம் பாடியே
முறைபெற முடிக்தனர் முடிக்க லாவதே. (ருக)

வேறு.

காப்பொடு கடவுள் வாழ்த்துக் கருதவை யடக்க மாற்றுக்
கோப்பமை படல நாட்டுக் குறைவறு படல மென்று
நீப்பரு நகர மேன்மை நிலவுமப் படல மான்றோர்
பாப்புகழ் பாயி ரத்தின் படலமென் றுக்கிப் பின்னர். (ருஉ)

வேறு.

காண்டகு முற்பவ காண்ட மாசுர
நீண்டமா கேந்திர நிலைய வுத்தமா
மாண்டகு தைவிக மருவு தக்கநற்
காண்டமென் றிவ்வறு காண்ட மாக்கியே. (ருந)

வேறு.

அவ்வறு காண்டந் தம்மு ளாதிகாண் டத்தி னீட
லொவ்விய திருக்கை லாச முமுறுபார்ப் பதியு மேலாஞ்
செவ்விய மேரு வுஞ்சீர் செறிந்தகா மதக னம்மும்
மெவ்வமின்மோனநீக்கு மெழிற்றவங்காண்டலும்மே. ()

முறைமணப் பேச்சு மந்த முழுவரைப் புனைவு மாற்ற
துறைதரு கணங்கள் செல்கை யுந்திருக் கல்யா ணம்மு
மறைதிரு வவதா ரப்பே ரதுவுநற் றுணைவ ரானோர்
கறைதபு வருகை தானுங் கமழ்சர வணமு மன்றே. (ருரு)

திருவிளை யாட்டுங் கோட்டிற் றிகழ்தக ரேற்ற முஞ்சீ
ரொருவயு னைச்சி றைக்க ணுறுவிப்பு நீப்பும் பின்னர்ப்

பெருவிடைப் பேறும்வீ று பெறும்படை யெழலும் வீர
மருவுதா ரகன்வ னைப்பு மகிழ்தேவ கிரியு மாதோ. (௫௬)

வலவசு ரேந்தி ரன்சீர் மகேந்திரஞ் செல்கை யும்பேர்
நலவழி நடையு மேன்மை நகுகுமார புரியும் பார்
சொலவருங் குநர மேய சுரம்புகு தலும்பூஞ் சோலை
திலவிடை யின்றி மேவிச் செறிதிருச்செந்தில்தானும். (௫௭)

மருவிரண் டாங்காண் டத்தின் மாயையுங் காசி பப்பேர்த்
திருமுனி புலம்ப லுஞ்சேர் தைத்தியர் தோற்ற மும்பார்
தெரிதரு காசி பத்தின் முனியுப தேச மும்பண்
புரிமைமார்க் கண்டே யச்சீ ருதுவுமற் றதுவுமன்றி. (௫௮)

மாயையு பதேச மும்பின் மற்றவ ணீக்க முந்தொல்
லாயதா னவர்தம் யாக மதுவுநல் வரத்தின் பேறும்
தாயசுக் கிரனார் செய்த தொகையிலு பதேச மும்பொன்
பாயவண் மையதா மண்ட கோசமும் பகருங் காலே. (௫௯)

திக்குவி சயமு மந்தத் திகழெதிர் கொளலும் வண்மை
மிக்கவு ருத்தி ரர்கேள் வியுநகர் செயலு மேன்மைத்
தக்கவர் புகழ்பட் டாபி டேகமுந் தருவர் போற்றத்
தொக்கபல்வளங்கள்சூழத் தொல்லரசாட்சிசெய்வும். (௬௰)

அமரரை யேவல்கொள்கை யதுவுந்திண் புதல்வர்ப்பேறுந்
தமநிற வில்வ லன்வா தாவியுங் குலிச மேந்து
மிமையவர்க் கிறைக ரந்தாங் கியையுமின் மணிசேர் விந்தச்
சிமையமுமகத்தியப்பேர்ச்செறிவுமன்றிற்பொருப்பும் (௬௧)

பெருத்துறு விந்த நீண்ட பிலம்புகு வதுந்தீச் செய்கை
விருத்திவில் வலன்வா தாவி விளிவுங்கா விரியி னீப்புந்

திருந்தமார் திருக்குற் றுலச் சேர்வுமிந் திரனர்ச் சிப்பும்
பொருந்தமிக்குள்ளதேவர்புலம்புமயிராணிசோர்வும் (௬௨)

நந்தலி விறைமை பூண்டு நணுகும காசாத் தாவு
மிந்திரன் கயிலை செல்கை யிதுவும சமுகி யும்பெண்
ணிந்திராணிமறுப்புஞ்சீ ரிடைபமகாகாளரேய்வு
மந்தவசமுகிசோக மதுவுமேயன்றிப்பின்னர். (௬௩)

இந்திரன் மீட்சி யேயு மிணையில்சூராசிருப்பு
மந்தவெந்திறல்கொண்டுள்ள வசமுகிநகர்காண்டும்மற்
றிந்தவசமுகியென்று மிவர்புலம்புகையுஞ்சூர
னந்துதண்டிப்புந்தேவ ரருஞ்சிறைநணுமன்றே. (௬௪)

அந்தமாமூன்றுங்காண்ட மதிற்றிறல்வீரவாகு
கந்தமாதனத்திற்சேர்வுங் கருங்கடற்பாய்வுந்திண்மை
வந்திடுவீரசிங்கன் வதையுமிலங்கைவீழ்வுந்
முந்ததிவீரன்மாய்வு மொழிமகேந்திரத்திலெய்வும். (௬௫)

தருகயமுகன்வதைப்புந் தைத்தியர்சூழ்ந்துவாமு
நகர்புகலதுவுமேன்மே னவிசயந்தன்புலம்பு
மிருசயந்தன்கனவின் காட்சியும்வீரவாகு
வகைசயந்தனைத்தேற்றுஞ்சீ ரவைபுகுதலுமேயன்றி (௬௬)

சதமுகன்வதையுங்காவ லாளரின்வதையுந்தக்க
விதாகரழிவினேடு மேவுசகத்திரத்திண்
மதமுறுவாகுகள்வீ வதும்வச்ரவாகுமாய்வும்
வதநிதமுற்றயாளி மாமுகன்வதையுமன்றே; (௬௭)

விறனுறுவீரவாகு மீட்சியும்வீறுபெற்ற
குறைவறுசூரபன்மன் கோனகர்புரிவுமற்றை

யறைபுகழ்ச்சூரபன்ம னமச்சியலதுவுமந்தக்
கறைமொழியின்றனாலாங் காண்டமற்றதனிடத்தே. (௬௮)

உரவுறுமேமகூட மும்வரவுகேள்வியுஞ்சீர்
தருமுதலிரண்டுமூன்றுச் சாற்றுநான்முறைமைக்கேற்ப
விரவியம்பகைஞன்சூர னெல்லைதன்பகைவன்போருந்
திருநகர்புகலுமந்தத் திறலிரணியன்செய்போரும். (௬௯)

அவுணனக்கினிமுகத்த னடைவதையதுவுமெய்ம்மை
தவறுறலுற்றமூவா யிரர்வதைதானுமாவா
முவமையில்புண்டரீகத் துற்றுகைதருமகேரப
னவன்வதையதும்பானு வடையலன்வதையுமன்றே.

சிங்கமுகாசுரன்வ தையுந்திறற்செல்வமேய
துங்கதைச்சூரபன்மன் றொலைவும்வான்றேவர்போற்றும்
பிங்களனெத்தபுந்தி பெறுமிரணியன்புலம்பு
மங்களமிழற்றியாரும் வழுத்துமம்மீட்சிதானும். [illegible]

தறைபுகழைந்தாங்காண்டந் தனிற்பரங்குன்றிற்சேர்வும்
அறைதருந்தெய்வயானை யம்மைதன்மணமும்விண்மே
லுறைகுடியேற்றுங்கந்த வெற்பினிலுறலும்விண்ணோ
ரிறைமகிழ்போகமேய விந்திரபுரியுமன்றே. (௭௨)

வென்றவாறுங்காண்டத்தின் மிகுமுபதேசமுந்தக்
கன்றவஞ்செயலுந்தக்கன்மகப்பெறுகையும்விண்டோற்றிச்
சென்றிடுஞ்சந்த்ரசாப மதுவும்வெண்டிங்கணொற்றி
யொன்றுமைகயிலைநீப்பு முரைத்தகாளிந்திதானும். (௭௩)

௩

உமைதவம்புரிதலும்பண் புறுதிருமணமுந்தக்க
னமைவுறுகயிலைசெல்கை யதுவுநான்முகத்தின்மேவி
யிமைபிரமயாகசாலை செய்தலுமிணைமற்றின்மை
சமைதருததீசியோடு ததீசியுத்தரமுமாலோ. (எச)

ஆங்கயமுகனுற்பத்தி யஃதுமனந்தன்சாப
நீங்கலுந்தானமுங்கேள் வியுமுமைவரலுநீண்ட
பாங்குறுகின்றவீர பத்திரத்துடனியற்றுந்
தீங்கமையாகசங்கா ரமுமதுசென்றபின்னர். (எரு)

கழலடிமுடிமதுடடுந்தக் கன்சிவபூசைசெய்வும்
விழைவுறுதனிவேற்கந்த விரதமுமதிமுகத்துச்
செழுமைகொள்வள்ளியம்மை திருமணமதுவுமேவப்
பழுதின்மற்றவற்றையெல்லாம் படலமதாக்கிப்பின்னர். ()

சேயுயர்குணத்தாரேத்துஞ் செய்யுளின்வகையாலீரை
யாயிரத்தொருமுன்னூற்றே டறையுநாற்பத்தாறுற்று
மேயவத்தொகைபெற்றுள்ள விருத்தத்தையாக்கிநோக்கும்
பாயவிடங்களெல்லாம் பயனுறச்செய்வதிஃதே. (எஎ)

இத்தனிக்காந்தச்செய்யு ளெவற்றினுமெய்திநின்ற
மெய்த்திருப்பதத்தின்சீரு மிகுபொருட்சுவையுமேன்மை
பொத்தியவணியுநீடி புலவர்கொண்டாடயார்க்கும்
பத்தியைமெய்ம்மையோடு பாலித்துநிற்குமன்றே. (எஅ)

உமைதருங்குமரமூர்த்தி யொளிரிருநளினபாதத்
திமைதருபொழுதுநீங்கா திலங்குமெய்யன்பிற்பூசை
சமைதருகச்சியப்பத் தவாவருட்குரவன்வையத்
தமைவுறநிகழ்சகாத்த மறையெழுநூற்றின்மாதோ. (எகூ)

வேறு.

அங்கமர் குமரகோட் டத்தி லன்னதை
யிங்கித மாவரங் கேற்ற வெண்ணியே
மங்கல தினமுநல் வளமு கூர்த்தமுந்
தங்கருத் தகத்துநிச் சயித்துக் கொண்டனர். (அ0)

கொண்டுல கெங்கணுங் குலவு முக்கணன்
றொண்டுசெய் பரம்பரைத் தொழும்பர் யாவரு
மண்டுளன் பொடுவர வரைந்து பத்திரந்
துண்டுதுண் டாகவே சூழத் தூண்டினர். (அக)

அறுமுகத் திறைபர னமருங் கோட்டமு
மறுவறு மவனுலா வருநல் வீதியு
முறுபெரு மலங்கரிப் புறவு றுத்தினர்
பெறுதிற லேவலர் பெரிது வந்தரோ. (அஉ)

வேறு.

விட்ட பத்திரத்
தொட்ட கப்பொறித்
திட்ட மங்கலச்
சுட்ட நாளிலே. (அங)

வேறு.

கருநெறி யகற்றிநற் கதிய ளித்தலாற்
றிருநெறித் தமிழெனச் செப்ப நின்றுமெய்
யருளுரு வாகுதே வார வாசகப்
பொருள்தெறி வல்லவர் பொருக்கென் றெய்தினர் (அச)

நமன்பட வுதைதரு நாத னம்மனோர்
தமங்கெட வுரைத்தமுத் தனிப்பொ ருட்பெருஞ்
சுமங்கல விசேடநற் சுருதி யாஞ்சிவா
கமங்களின் வியுற்பனர் கலந்தங் கெய்தினர். (அரு)

எண்டிகழ் குணமுடை யிறைவ னெங்கணு
மண்டிய வுலகர்க்கு மகிழ்ந்து கூறிய
திண்டிறல் வேதத்துஞ் செறிந்த வங்கத்தும்
பண்டித ராயினார் பலரங் கேகினார். (அசு)

நலமுடொல் காப்பிய நவின்று வேண்டிய
பலவிலக் கணங்களும் பயின்று சங்கத்துக்
குலவிலக் கியங்களுட் கொள்ளு மூவியநீ
புலவரெவ் விடத்தினும் பொருந்தி வந்தனர். (அஎ)

கரசல மலைபரி கடுங்கண் வீரர்ச
மரசய நெடுந்திறல் வையஞ் சூழ்தரப்
பரசுபல் புகழொடு பரம்பி யெங்கணு
மரசரன் புடனவ ணடைய வந்தனர். (அஅ)

தொக்கபல் பொருள்களிற் றுவன்றி நாளுந்தம்
புக்கமுற் றடைபவர் பரிவொ டேற்றிடத்
தக்கன புரியுநற் றரும வான்பிர
புக்களும் வந்தனர் பொருத்த மாகவே. (அகூ)

புகலுமிங் கிவரன்றிப் போக்க பத்திரந்
தகவுட னேற்றவர் தம்மைச் சார்ந்தவர்
மிகவவர் நட்பினர் மேவ யாவருஞ்
சுகமொடு துன்னினர் துன்னும் வேலையில். (கூ௦)

வேறு.

திறமலி கச்சி யப்ப சிவனரு ளாலென் றேது
மறமலி வகற்றுஞ் சீர்க்கு மாரதந் திரத்தி னாற்றா
னிறமலி மலர்சந் தாதி நிகழ்த்துப கரணங் கொண்டே
யறமலி குமர கோட்டத் தடிகளைப் பூசை செய்தார். (கூக)

செய்தறு முகத்து மேலோன் றிருமுன்னர் மெழுகிப் பீட
மெய்திட வமைத்துப் பீடத் திலங்குபட் டறவி ரித்து
வெய்தென மலர்க ளேவி விரிமணத் தூபங் கோட்டி
மைதவிர் மந்தி ரத்தின் மருவுமா சனங்கற்பித்து. (கூஉ)

கிரிச்சுட ரென்னத்தோன்றிக் கிளர்கந்த புராணந் தீட்டும்
விரிச்சுல ருச்சிப் பெண்ணை வியன்மடன் முறையை யன்பு
தரிச்சுடம் முளத்தொ டவ்வா சனத்தெழுந் தருளு வித்து
வரிச்சுரும்பலரார்ச்சித்து வணங்கிப்பஃறுதிகள்செய்தார். ()

பொழிதரு மன்பினோடு போற்றிப்பின் பிருந்து கொண்டு
கழிபெருங் காத லுள்ளங் கலந்தனை வோருங் கேட்ப
மொழிதிக டசக்க ரச்செம் முகமைந்து ளானென் றேது
மழிவிலாத்தலைமைச்செய்யு ளதனையோர்முறைவாசித்து.

செப்புதி கடச மென்னுஞ் செய்யுண்முன் னடி யுண் மேய
திப்பிய பதங்க டம்மைத் திகழென்று தசக்க ரவ்வென்
றப்பெருஞ் செம்முகம்மென் றைந்தென் றுளானென்றெய்த
வொப்புறப்பிரித்துக்கொண்டவ்வொண்பதப்பொருளுட்கொண்டு(கூ௫)

வேறு

கருதான்றோ ரெணவிளங்கு கின்றபத்துத் திருக்கை
களுஞ்செவ்வி யவைந்துதிரு முகங்களுமுள் ளசிவ
பெருமானு ருடையவெனப் பொருளுரைத்தா ருடனே
பிறங்குமவ ணிருந்ததமிழ்ப் புலவோரு ளொருவர்

தருவாய நெடுங்கோட்டுச் செந்தளிர்மா வுருவாய்ச்
சாரவுண ரொருருவ மீருருவாய்ச் சமயக்
குருவாய்வேற் படைகொண்டு கூறுசெய்த வொருவன்
குரைகழலுட் கொண்டிடுமாசிரியர்தமைக்குறித்தே()

வேறு

வனப்புச் செந்தமிழ் வாய்ந்தசு வாமிகா
டினப்பு கழ்ச்சொற் றிகழ்தசந் திகடச
மெனப்பு ணர்விதி யெய்ந்ததொல் காப்பிய
முனைப்பு ணர்விதி முற்றுமில் லென்றனர். (கூஎ)

ஆங்கண் மெய்க்கச்சி யப்பசி வன்வினைத்
தாங்கள் கூறிய தொப்பந்த குந்தகு
மீங்க தாயினிம் முன்னடி யென்னுடை
யோங்கு வாக்கதன் றுண்மைய துண்மையே. (கூஅ)

போற்று சங்கப் புலமைய ராகியே
யாற்று நல்லரு ளாறுமு கப்பிரான்
மாற்றின் மெய்த்திரு வாக்கவ ரேயெனக்
கேற்ற மோடிவ் வடியெடுத் தீந்தனர். (கூகூ)

என்றக் கேள்வி தனக்கிவ் விடையினை
யொன்ற வேயுரைத் தாரது வுட்கொளீஇ
நன்று கேட்டவர் நாவலர் தாமெழீ
துன்று புன்முறு வன்முகந் தோற்றியே. (௧00)

குமர கோட்டத் தமர்ந்த குருபரன்
றமர ராயசு வாமிக டம்மிட்டுத்
தமர வேயின் வடியெடுத் தீந்ததிங்
கமர ரேத்துமெய்ச் சத்திய மாயிடின். (௧0௧)

ஆக வாயினு மாங்கது ராசிய
மேக ருத்துற யாங்கண்மற் றன்னதைத்
தாக மோடு தழுவத லெங்ஙனம்
பாக முற்றவிப் பண்பு ளவைக்கணே. (௧௦௨)

அன்ப ருள்ளக மாலய மாக்கொளும்
பொன்பி றங்குமெய்ப் புண்ணிய வேவிறை
வன்பொ ருந்துசு வாமிக ளுக்குமுன்
னின்பு ருக்கொண் டெழுந்தருள் கொள்கைபோல். ()

எங்க ளுக்கு மெளிமையிற் றோன்றிநாம்
பங்க மற்றவிப் பாட்டடி தன்னையே
யிங்கி வற்கெடுத் தீந்தன மென்றரு
டங்க வோதிற் றழுவிக்கொள் வாமரோ. (௧௦௪)

அன்றேன் மற்றிதற் காகும் விதியினை
யின்றேய் வுற்ற விலக்கண நூல்களு
ளொன்றே தாயினு முற்றிடி னன்னதை
நன்றேற் காட்டுக நாடிக்கொள் வாமன்றே. (௧௦௫)

அல்லாக் காலையி லாண்டகைத் தண்கதிர்ப்
பொல்லா முத்துறழ் புங்கவற் போற்றிசை
யில்லா மீதரங் கேற்றவொட் டேமெனச்
சொல்லா நின்றனர் சொல்வர் குரவரே. (௧௦௬)

இவ்வி ரண்டனு ளொன்றமற் றொன்றினைத்
திவ்வி யம்பெறச் செய்குவ னேலெனன்
றவ்வி யல்பி னருளிச்செய் தாங்கவைச்
செவ்வி யோரைச் செலவுடன் போக்கியே. (௧௦௭)

அற்றை நாளி னமுதருந் தாதிரா
வுற்ற காலத் தனுற்றுநற் பூசனை
முற்றி யானபின் மூடிக் கதவினைப்
பற்று சந்நிதிப் பாரிற் படுத்தனர். (கoஅ)

அமைய மங்கதி னாரிரு திண்புயத்
துமைதன் மாமக னுண்மையு ளங்கவர்
தமைய ளித்திடத் தானவர் சொப்பனத்
திமையெர் டுங்குமுன் னேய்வுறத் தோன்றியே. ()

தீர ராமவை சேர்பவர் சோதியஞ்
சோர வேபுகழ்ச் சோழதே சத்தினில்
வீர சோழிய மென்றொ ரிலக்கணச்
சீரு னூலொன்று சேர்ந்திடு மன்பனே. (கக0)

சிட்டா ரேத்துந் திகழ்தச மென்பன
கட்டா கத்தி கடசமென் றும்விதி
தட்டா நூலதிற் சந்தி படலத்தி
லொட்டா நிற்குமீ ரொன்பதாஞ் செய்யுளில். (ககக)

சோழ நாடதிற் றுன்னுமோர் நாவலன்
வாழ நூலொடு வந்துநா ளைக்கிவண்
காழ னவ்விதி காட்டுவன் யார்க்குமென்
றூழ மாக வறைந்து மறைந்தனன். (ககஉ)

வேறு.

உருவுள வுயிர்கட் கெல்லா முயிரென நிற்கும் வேலோ
னருளிய கனவின் றன்மை யனைத்தையுங் கச்சி யப்ப
குருபரனடுத்தவைகற்குழாங்கொள்போதவையோர்யாருந்
தெருளுறுமவருட்கொள்ளத்தெருட்டினன்றெருட்டலோடும்

மருவுவெண் ணீறு கண்டி வயிரவொண் கடக மாரம்
பருமணியாழிபீதாம் பரங்கள்பொன்னரைஞாட்சுற்றுத்
திருமுடிச் சாத்துச் செம்பொற் செம்மணிக் குண்ட லங்க
ளருவொளிரொருதம்மேனி யுற்றுநல்லழகுவாய்ப்ப. ()

புலவர்மற் றொருவர் கையிற் புத்தக மொன்று கொண்டு
நலமொடங் கேக வங்க ணணுகினோ ரவரை நோக்கிக்
குலமுனீர் யாவ ருங்கள் குலவுகைம் முறையா தென்று
வலமொடு வினவி னார்கள் வந்தநா வலர தற்கு. (ககரு)

நகருறு சோழ தேச நாமிருப் பதுநீர் கேட்ட
துகளிலிம் முறைதான் வீர சோழிய மென்று ரக்காற்
றகவொடு முன்னை வைகற் றடுத்தநா வலர்வி ரைஇச்சென்
றகநிறை யவாவி னோடு மம்முறை தன்னை வாங்கி. (ககசு)

பையுளை யகற்றுஞ் சந்தி படலத்திற் பதினெட் டாகுஞ்
செய்யுளைப் படித்து ணர்ந்து திகடசக் கரம தென்னு
மெய்யுறு புணர்வி னுக்கு விதியதி லிருத்த லோர்ந்து
மையில்விம் மிதத்தி னோடு மகிழ்ச்சியு முற்று நின்றார். ()

உற்றவே னையமூத் தோரு மொருவர்பின் னொருவ ராக
மற்றதை வாங்கிப் பார்த்து மகிழ்வும்விம் மிதமு முற்றார்
பற்றுள சோழ தேசப் பாவலர் கச்சி யப்ப
முற்றறி குரவர் கையின் முடிவிலம் முறையை யீந்து. ()

இறுதியி னூல்களெல்லா மியல்புட னுணர்ந்துமெய்ம்மைப்
பெறுதியுற் றங்கண் மேய பேரவை யோரை நோக்கி
யுறுதடைநீவிர்கொண்ட தொழிந்ததாவொழிந்ததாவென்
றறுதியி லடுக்கிற் கூறி யவ்விடை மறைந்து போனார். ()

அக்கண மதனிற் கச்சி யப்பமெய்க் குரவர் தம்மைப்
புக்கடை மலநீக் கித்தன் பொன்னடிக் கடிமை கொண்ட
செக்கர்மெய்ய றுமுகத்துச்சேய்பெருங்கருணைப்பேற்றைத்
தொக்கதம்மனதிற்றங்கித் தோன்றிடவுன்னியுன்னி. ()

நிரலுறு மங்க மெல்லா நெக்குநெக் குருக வேகா
வரமிக விதிர்வி திர்ப்ப மயிர்க்குழி தொறுநீர்த் துள்ளி
கரகர வுதிப்பத் தூம்பிற் கதித்தல்போ லின்பக் கண்ணீர்
பரவுறப் பரமா னந்த பரவச ராகி யுற்றார். (கஉங)

அப்பொழு தவையோ ராரு மன்புட னிங்கு வந்த
திப்பிய கவிஞர் வானஞ் செறிதரு குமர கோட்டத்
தொப்பிலெம்பெருமான்செவ்வே லொளிர்கரத்தொருவனென்றே
துப்புறத் துணிந்து தீராத் தொடர்புளாச் சரிய முற்று. ()

வெயிலிடை வெண்ணெய் போல மிகக்கசிந் துருக நெஞ்ச
மெயிலுரோ மஞ்சி லிர்ப்ப மிளிர்குறு வேர்வை கொள்ளச்
செயிரக லருவி போலச் செறியவா னந்தக் கண்ணீர்
பயிலுமா னந்தக் கூத்துப் பரிவுட னாடி யாடி. (கஉரு)

குணிப்புள்சீர்க்கச்சியப்ப குருமகிமையைநன்கோர்ந்தே
யணிப்புளங் கவர டிக்கீ ழடியற்ற மரம்போல் வீழ்ந்து
பணிப்புடன்வணங்கியந்தப் பரமவான்குருவைச்சோத்தம்
பிணிப்புறச்செய்தார்நெஞ்சம் பெருகுமெய்யன்பினோடும்.

அடையலர்ச் செகுத்த வைவே லறுமுகத் திறைமு னுற்ற
நடைபெறு மவைக்கண் வைகி நலனுறத் தடுத்த சூரி
புடையமர் கச்சி யப்ப புனிதமெய்க் குரவர் தம்மை
யுடைமையின்போடுபல்கா லுறமிகத்தொழுதல்செய்து. ()

புன்னிக ரெம்பி ரானே புழுத்தலை நாயினுங் கீழ்
மன்னிய தமிய னேன்சு வாமிகண் மகிமை தன்னிற்
றன்னமு மெல்லா ஞாதாற்றுந் தடைப்பெருங் குற்றந் தாங்கிச்
சின்னவிவ் வடியன் மீது திருவருள் புரிக வென்று (௧௨௬)

அதிவிநயத்தின் வேண்டி யடியற்ற மரம்போன் மீட்டும்
பதியவீழ்ந் தேங்கி டந்தார் பார்த்தவக் கச்சி யப்ப
முதிரருட் குருவே மூஉவம் மொழிபுத ரிரண்டு கையுந்
துதியுடங் கரத்திற் பற்றித் தூக்கிமெய் யிறுகப் புல்லி. ()

அடைவுளிவ்வவையோர்யார்க்கு மையமே[illegible]
தடையிலன்றோவுண்மைத் தண்ணளி வெளிப்பட்டன்று
லுடைவிலிங் கியற்று கைம்மா றுதன்பொருட் டியாது தங்கட்
கிடையலின் றறியேனென்சொ லிரண்டிசைஇப்புகழ்ந்துகொண்டார்.

வேறு

ஆங்கதன் பின்பவை யண்ணியுறுந்
தாங்களே லோர்களுந் தாழ்வொடுதண்
டேங்கமழ் தாதுறு செங்கமலப்
பூங்கழல் சென்னி பொருத்தியரோ. (௧௨௯)

போற்றடை வுள்ள புராணமரங்
கேற்றவி னித்தடை யின்றிமல
மாற்றணை வுற்றசு வாமிகளே
தோற்றர வோடு தொடங்குகவே. (௧௩௦)

என்றுவி ஞ்ஞ மியற்றினர்பின்
கன்றவில் சீர்பெறு கச்சியப்ப
நன்றுறை மெய்க்குரு நாதனவ்வை
னின்றக வோடரங் கேற்றுவரால் (௧௩௧)

சீதமுண் மாமதி சேர்சடையோன்
போதமுள் காஞ்சி புரத்துளருண்
மாதவை யாதிசை வர்களடி
யாதலே மேவுத லானவர்க்கும். (கநஉ)

வேதியர் போற்றயில் வேன்முருகன்
யூதியுள் கந்த புராணகதை
தீதிறு தங்கள் செவிக்கொளவே
போதியை தொண்டரெண் போயினர்க்கும். ()

அயிலுண வாதிய வவைபெல்லா
மியலந டந்தன வேதொண்டை
நயனுறு நாட்டறு நாற்கோட்டத்
துயர்வுறு மேழிய ரொண்செலவால். (கநச)

அவையதின் மிக்க வவாவிநெடுங்
குவைபெற யாவருங் கூடிமரீஇ
நவையறு செஞ்சடை நாதனுரை
செவைமுறை யோடு செவிக்கொளவே. (கநரு)

மருவிய நாடொறும் வாசித்துப்
பொருளுரை செய்த புராணமதைக்
கருவறு தேசிகர் கச்சியப்ப
ரொருவரு டத்தி னுறமுடித்தார். (கநசு)

வேறு.

பெறுபுகழ்ப்புராணமுற்றுப் பெற்றவக்கணத்திற்செவ்வே
லறுமுக னருள்சேர் கச்சி யப்பமெய்ப் பரம வாசா
னுறுதிருப் புராணந் தீட்டு மொளிவளர் முறையை நூலி
னிறுவிதிப் படியர்ச் சித்து நிலனுற வணங்கி னரால். ()

அப்பொழு தங்க ணுள்ள வனைவரு மன்பி னோடு
மெய்ப்பட விம்மி விம்மி விழுந்துதண் டென்னத் தெய்வத்
துப்பமர் கச்சி யப்ப தூயநற் குரவர் தம்மைச்
செப்புமிக்கவாவுட்கொண்டு செவ்விதிற்றொழுதெழுந்தே.

இருகர முச்சி யேறி யிமைதரக் குவிய நின்றே
யருமையிற் றுதித்தார் கச்சி யப்பபட் டார கர்சீர்ப்
பொருவின்மெய்ப் பொருள்சேர் கந்த புராணநன் முறையி னோடு
திருமலி வளஞ்சேர் தந்தச் சிவிகையி லெழுந்து வைகி. ()

நலனுறு தொண்டை நாட்டி னுலறு கோட்டத் துற்ற
வலனுறு மேழிச் செல்வ வளமையோர் நானஞ் செய்து
குலனுறு மிரண்டு டுத்துக் குறைவில்வெண் ணீறு பூசிப்
பொலனுறு கண்ம ணிப்பூண் பூண்டுலா மவர்க ளுள்ளே()

சிலரெழிற் சிவிகை தாங்கச் சிலரிணைக் கவரி சாய்ப்பச்
சிலர்விரி குடைபி டிக்கச் சிலர்நெடுங் கொடியெ டுப்பச்
சிலர்மலர் மாரி சிந்தச் சிலர்மயில் வட்டம் வீசச்
சிலர்முத்துப்பந்தரேந்தச் சிலர்பகல்விளக்குத்தூக்க (கசக)

தண்ணுமை முரசு பேரி சல்லரி திண்டி சங்க
மண்ணுறு குடமு ழாப்பொன் வயிர்துடி படகம் பீலி
பண்ணுதொண் டகமுன் னுகப் பகருமங் கலவி யங்க
ளெண்ணுநல்லார்ப்பிற்றிக்கிங் கனைத்துமேசெவிடுகொள்ள()

நடைபெறுதமக்குமுன்னா னவிலுநன்முந்நூன்மார்பேற்
றடைவுறு வொழுக்கம் பூண்ட வருமறைக் கிழவர் யாருங்
கிடைகிடை யாகக் கூடிக் கிளர்புனற் கங்கை சூடுஞ்
சடையவ னருளும் வேதத் தனிமொழி யோதிச் செல்ல()

சரவண பவவி சாக சண்முக கார்த்தி கேய
குரவகாங் கேய கந்த குககிர வுஞ்ச தார
வரகும ரசிகி வாக வமரசே னாதி பவ்வென்
றூரனுறப்பரமன்றொண்ட ருரைசெய்பேரொலிதழைக்க.()

உருவளர் நகர்கட் கெல்லா முத்தம மாகுங் காஞ்சித்
திருநக ரமர்வோ ரந்தத் திருநகர் வீதி தோறு
மருவுநற் சுத்தி செய்து வரைபொளி யுளிநேர் பைங்காய்ப்
பொருவிலெட்டிலையரம்பை பொலிவுறவகுத்துநாட்டி. ()

வாரணமிடற்றுச்செந்தா மரைமலர்முகத்துச்செவ்வாய்ப்
பூரண கும்பக் கொங்கைப் புனிதைய ரிடையிற் கட்டு
மேரண வியபொற் பல்கா சிலங்குமே கலையை யொப்பாந்
தோரணவகைகளெல்லாந் தொகைபெறத்தொகுத்தல்செய்து. (௧௪௬)

மல்லிகை செருந்தி முல்லை வகுளம்வெண் சாதி நீலம்
பல்லிதழ்க் கஞ்சம் புன்னை பாதிரி கோங்கு பட்டி
மெல்லிய பாரி சாதம் விரிமடற் கொன்றை முன்னாச்
சொல்லிய மலர்ப்பூ மாலை துணையுற வமைத்துத் தூக்கி.()

இலவிடைவெளியுற்றெய்தத் திரிவெண்ணூல்சுற்றிமாவி
னலவிளந் தளிர மைத்து நாரிகே ளத்தி னோடு
பொலனுறுகூர்ச்சஞ்சேர்த்துப் பொற்பரிவட்டஞ்சாத்திக்
குலவுபூ ரணகும் பங்கள் குவைபெற வமைத்து வைத்து.

சிறையளிமிழற்றிச்சூழச் செறிந்தபல்கோட்டின்மென்மை
யுறைதளிர்விரித்துக்கானத் துற்றபுன்குதிர்க்கும்வெண்மை
நிறைமலர் பொருவு செந்நெ னெகிழ்திரி பாக்க மென்றே
யறைபொரிபொன்வள்ளத்தி லமைத்துப்பின்னெடுத்துத்தூவி(௧௪௯)

மணிபெறு கம்ப தீப மறுவில்பொன் னிரத தீப
மெணிமெழி லடுக்குத் தீப மினைபசர தீபந் தூக்குத்
தணிவினற் றீப மற்றைத் தழங்குகைத் தீப மாதி
யணிபெறு தீப மேற்றி யறுகினை யெடுக்க மாதோ. (கருய)

நிலவுதம் முருவிற் பூதி நிறைபவுந் தூளஞ் செய்து
பலமுர மிருமதோ ளாறும் பகருமற் றையவி டத்தி
னிலகுறு மொன்று மாய விரைவிர லளவ ணிந்த
நலதிரி புண்ட ரத்தி னயமுள்வெண் பொலிவார்பொற்பும்.

சிகைசிரஞ் செவிநற் கண்டந் திகழ்கர மணிக்கட் டாக
முகையக லத்து லாவு முபவீத மிவற்ற டைவே
நகைபெறுமொன்றொடொன்பா னுன்கொராறெண்ணுன்கீரெட்
டகையிராறொளிர்நூற்றெட்டொன் றடையக்கமாலைச்சீரும். (கருஉ)

மிருத்திய மாயை கன்மம் வேறுபட் டொழிய முக்கட்
கருத்தன தெழின்மலர்த்தாட் கண்ணுயிரடங்குந்தன்மை
யிருத்தலித் தன்மை யென்றே யிலங்கறி வுயிர்கட் கெல்லாந்
திருத்துறப் பருவிற் காட்டுஞ் சின்முத்தி ரையினற் சீரும்.

பொருவினல் லருட்க ணின்று பொழிதரு பரமா னந்த
மருவுறு புனலுங் கண்டு மறுவில்பல் லடியர் மெய்ம்மை
நிருமல மாகு முள்ள நெக்குநெக் குருக வந்தே
யருகுறவ்ணங்கிப்போற்றி யானந்தக்கூத்தங்காட. (கருச)

பலமுளா மோத மல்கிப் பராய்ச்செறி தரவே நாலெட்
டலகொடு மரீஇயெஞ் ஞான்று மன்புட னியற்றப் பெற்ற
நலமுமொடால் லறங்க ளெல்லா நருபுகழ் மிகக்கொண் டுற்று
வலமுட னிலவவ் வீதி வளாகத்து வலஞ்செய் தாரால். ()

மணிமிளிர் தருபொன்வீதி வலஞ்செய்து குமரகோட்டத்
தணியுறு சந்நி திக்க ணடைந்துபொற் சிவிகை நின்றுந்
திணிபெறு புவிக்கி றங்கித் திருமுறை யதனைக் கோயிற்
றுணிவுளுட் கொண்டுசென்று துதிதிருமுன்னர் வைத்தார்.

அக்கண மெவருங் கச்சி யப்பவா சிரியர் தம்மை
மைக்கரு வகற்ற னோரை மையுமமை யும்மென் றன்பின்
மிக்குரை புரியும் போதும் விடுதலின் றுரா மையாற்
றொக்குபல் காலு முண்மை துலங்குற வணங்கி நின்று. ()

பெருகருணிதியாமெங்கள் பெருமவித்தமிழ்நாட்டியாருந்
திருவுட னுய்யக் கூறுந் திறனுளிப் புராண மான
பொருவில்வானமிர்தெங்காதாம் புகரில்வாய்மடுத்தியாங்க
ளிருளற வுய்ந்தே முய்ந்தே மெனவுரைத் தின்ப முற்றார்.

இயலுணு டெங்கு மேவி யியைசிவ னடியர் யாரு
நயமுளக் காந்தந் தன்னை நன்குபா ராட்டி யன்பு
பயிலுறப் பொறிப்போர் கேட்போர் பாடுவோ ருரைசொல் வோரா
யுயர்பொருட் சுவைசொல் லின்போர்ந் துறுமின்பச் செல்வமுற்றார்.

பின்னோர்நாட்கச்சியப்பப் பெருந்தகைக்குரவர் தன்றாண்
முன்னுமாணவர்கட்கெல்லா முதல்வர்கோனேரியப்ப
ரென்னுமாணவரைநோக்கி யாம்புகழ்காந்தத்தேழாய்
மன்னுபதேசகாண்டம்வண்டமிழ்ப்படுத்துகென்றார் (௯௦)

ஆயபோதவர்தம்பாதப் போதினிலன்பிற்றாழ்ந்தே
மேயவக்காந்தத்தேழாய் விரியுபதேசகாண்டம்
பாயதொல்புவியில்யாண்டும் பரவுறும்புகழின்மேவத்
தாயதீந்தமிழிற்சொற்றார் துலங்குகோனேரியப்பர். (௯௧)

அலரருள் வடிவாங் கச்சி யப்பமெய்க் குரவர் பின்னுஞ்
சிலைபகல் குமர கோட்டஞ் செறிந்திடு மயில்வே லண்ணன்
மலரடிப் பூசை செய்து மறுவின்மெஞ் ஞான நிட்டை
நலனுறப்புரிந்துமங்ங னண்ணினரிருந்துமாதோ. (௧௬௨)

மங்கலத் துறுமி டாடி மந்தல ரிழிக்குஞ் செம்மை
யங்கமு ளருணப் புந்தே ளணிமக ரத்தி னின்றி
யங்கவுற் றிடுகை ரீர மென்றனை வோருங் கூறத்
திங்களி னுருவ மூன்று திகழ்திருத் திங்க ளுளில். (௧௬௩)

நிறைதரு மகண்டா கார நித்தவி யாப கத்தோ
டறையுமெய் யறிவா னந்த வாகமாய் நின்ற முக்க
ணிறையவ னயன்மா லாதி யாவர்க்கு மரிய னாகி
யுறைசிவ பிரானொ டொன்றி யொன்றுரு வொன்று பெற்றார். ()

சிவனடியவரையந்தச் சிவனருளிலீலை தம்மைத்
தவமலிசேக்கிழாருந் தகுபரஞ்சோதியாருங்
கவனமதியற்றவல்ல கருத்தர்மற்றவர்போற்கந்த
னுவமையில் புராணங் கூறற் குரியவர் கச்சி யப்பர். (௧௬௫)

ஆறுமுகப் பெருமான் வாழ்க வவன்மருங் கணங்கார் வாழ்க
வுறுகரத் தயிலும் வாழ்க வோங்கெழின் மயிலும் வாழ்க
றுகில்குக் குடமும் வாழ்க குகனுள்பல் லிடமும் வாழ்க
னற் காஞ்சி வாழ்க வாழ்கசீர்க் குமர கோட்டம். (௧௬௬)

மறைத் தொகுதி வாழ்க சிவாகமப் பகுதி வாழ்க
வுறு சைவம் வாழ்க மறுவில்வெண் ணீறு வாழ்க
ருவறு கண்டி வாழ்க புண்ணியத் தொண்டர் வாழ்க
நுவறு ஞானம் வாழ்க கந்தவேள் புராணம் வாழ்க. ()

குகனருட் கச்சி யப்ப குருபரன் வாழ்க வன்னோ
னகமகிழ் புராணம் வாழ்க வவனடிக் கன்பர் வாழ்க
மிகவவன் புராண மெங்கும் விளம்புமெய் யடியர் வாழ்க
சகமகிழ்ந் தேத்து மாதி சைவர்கள் வாழ்க வாழ்க. (௧௬௮)

பல்கறி வில்லேன் சொற்ற பாவழு வுற்ற தேனு
மல்கறி வுள்ளீ ரஃதை மாற்றிநீர் கொண்மின் மேன்மை
புல்கரி வெற்பங் கூற்ற புள்ளுரு வொழீஇத்தன் சாய
னல்கலை யன்றி வேறு நவிற்றுவ துலகி லுண்டோ. (௧௬௯)

நற்றவக் கச்சி யப்ப நாதனற் காதை தன்னைச்
சொற்றவ ராராய்ந் துற்றோர் துகளறு தன்பின் மேவிக்
கற்றவர் கற்க வுள்ளோர் கசிந்துள மினிதாக் கேட்க
லுற்றவ ரிவரெல் லாரு முயரின்பச் செல்வ ராவார். (௧௭௰)

வரைபக வெறிந்த வைவேல் வள்ளலின் சரித முற்றுந்
திரைதரு மமிழ்த மென்னத் தீந்தமி ழதனிற் சொற்ற
வுரைபெறு கச்சி யப்ப வொருபெருங் குரவர் பாத
மரைமல ரென்று மென்றன் மனத்தடத் தலரு மாதோ. (௧௭௧)

## கச்சியப்பசிவாசாரியர்புராணம்

முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

ஆக திருவிருத்தம் ௧௭௧.

நம: குமாராய.

கணபதி துணை.

# கச்சியப்பசிவாசாரியர் புராணம்

## அருங்குறிப்பு.

### காப்பு.

1. தம் என்றது களிற்றுமாமுக வரை.
2. அரம் பயில் வேல் நிகர் சக்கு உமை. சக்ஷு, கண்.
சக்கரம் படை கரன்—சக்கராயுதத்தையேந்திய விநாயகன்.

### கடவுள்வாழ்த்து.

1. வியாளயோகர்—பதஞ்சலியார் வியாளம்—பாம்பு.
2. தனது நாயகராகிய அரன்பால் விஷ்ணுவோடு தோன்றி அவ்வரனது வலப்பால் விஷ்ணு இருப்ப இடப்பாலிருக்கின்ற சிவகாமசுந்தரி.
3. தம்பம்-கட்டுத்தறி.
தந்தி-கஜேந்திரன்.
இதில் தந்தி முதலிய சிலசொற்கள் தொனிப் பொருளுமுடையன.
விம்பம்-கொவ்வைக்கனி.
4. கோட்டம்-மாறுபாடு. கோட்டம்-நாடு. காமகோட்டம்-காமாக்ஷிகோயில்.
6. புலவர்-தேவர்.
7. வடசக்கரன் - ஆலிலையிற்றுயிலும் விஷ்ணு.
அழல் பெறு திட சக்கு அரன்.
மானுட சக்கர மிகு நுதிகொள் காஞ்சி — மானுட வடிவத்தார் மிகுந்த வணக்கஞ்செய்கின்ற காஞ்சி.
8. கோட்டம்-கூட்டம், வளைவு, நாடு, கோயில்.
9. இரவித்தெவ்வு—பானுகோபன்.
10. அங்கம்-என்பு. நள் அங்கம் உறு-விரும்பத்தக்கசிவபுராண முதலியவுறுப்புக்களையுடைய.
11. புதர்—பூடு.
13. இது அகோர சிவாசாரிய பத்ததிவியாக்கியான ஆசிரியர் நிர்மலமணிதேசிக ரியற்றிய சுலோகமொழிபெயர்ப்பு.
14. நார்—அன்பு.
15. கொளுமியல்பு—எற்றுக்கொள்ளுதற்குரிய இயற்கை.
அவைக்கு என் மொழியைக் கொள்ளு மியல்புண்டாகுமென முடிக்க.

### நூல்.

1. தொண்டலம்-யானைத் துதிக்கை.
3. ஔவையார் அருளிய பாடல்.
வேழ முடைத்து மலைநாடு மேதக்க, சோழ வளநாடு சோறுடைத்து—.பூழியர்கோன்,

றென்னூடு முத்துடைத்தூத் தெண்ணீர் வயற்றெருண்டை நன்றூடு சான்றோ ருடைத்து.

4. தொண்டைநாட்டுள் சிவதலங்கள் 32 உண்மையின் அவை அம்பிகைபுரி அறம் பொருவு அரன் பதியெனப்பட்டன. அறம்-32 தருமங்கள்.

5. பின்னை—இலக்குமி.

7. இதயத்திடைப்பொருந்தமூலைக்குறி யெய்திவைகும் அரன்.

9. அகரம் போல் மதிக்கத் தக்க அனுதிசைவம். இகாத—நீங்காத

10. சதேசன்—சதாசிவன்.

11. குறுமெய் யோகன்-அகத்தியமுனிவன்.

12. சைவப் பரமன்—ஆளுடைய நம்பி

16. குருகு எயில்-நாரை யூர்.

18. துப்பு—உணவு

19. நாட்டத்து அற்பு உள்—கருத்தின் அன்பு உள்ள. வேல் ஓட்டு அ தற்பரன்.

21. கறை-புத்தென்னுநரகம்.

23. பெயர்க்காரணம்-நாமகாரணம்

25. ஆசிரியர் வித்தியாரம்பஞ் செய்விக்குமாறு பள்ளியிற்புகுந்து.

29. மேத்தியம்-சுத்தம்

31. ஏணம் நிலைபேறு

33. ஆரணத்து ஆரணப்பொருள்-வேதத்தின் ஞானகாண்டப் பொருள்

35. கு-பூமி

37. சாங்கரம்—சங்கரசங்கிதை

38, பகடு—பெருமை. அறிவோர் கண் உகள் தனித்த இன்பக்கடல்-அறிவோரிடத்துப் புரளுகின்ற இன்ப சாகர மாகிய குமரவேள்.

40. தலை புன் புழு உதிர வுலந்த நாய்.

44. அஃபொறி—அவைகளை யெழுதிய. அல்-இரவு.

46. காப்பு ஆற்றி.

47. கொன்-பெருமை. விதிமுற்றுதலையடைய முடித்து.

48. சேதிமம்—கோயில்

50. இறையேல்லை வசனமின்றி-கணநேரம் மௌனமாகி

50. யசனம்-பூசை

52. கோப்பு-தொடர்ச்சி

53. யவுத்தம்-யுத்தகாண்டம்.

71. பிங்களன்—வியாழன்

83. செலுத்திய பத்திரத்துள்ளே தகுதியாக எழுதப்பட்ட மங்கலத்தைக் குறிக்கும் அத்தினத்தில்

85. தமம்-ஆணவம்

88. கரசலமலை—யானை. சமரசயவையம்-போரில்வெற்றிகொள்ளும் தேர்.

92. வெய்தென—விரைவாக

93. உச்சிப்பெண்ணை-உயர்ந்தபனை விரிச்சு உலர் வியன் மடல் அன்புதரிச்சு உள் தம்உளத்து.

94. திகட சக்கரச் செம்முக மைந்தனான், சகட சக்கரத் தாமரை நாயக, னகட சக்கர வின் மணி யாவுறை, விகடசக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

97. தினப்புகழ்ச்சொல்—தினமும் புகழ்தலையுடையசொல்லாகிய முன—முன்ன

102. ராசியம்—இரகசியம்.

106. குளிர்ந்த கிரணங்கள்வாய்ந்த துளைபடாதமுத்தையொத்த ஆண்டகைப் புங்கவனைப் போற்றுங் கீர்த்திக்கு இடமாகவுடைய இந்நூலை.

110. சோத்தியம்—வினா.

112. காழ்—அண்—அவவிழி.

114. திருமுடிச் சாத்து—தலைப்பாகை.

117. வீரசோழியத்துச் சந்திபடலத்திற் 18-ம் செய்யுள்
"நான்கொடு மூன்றென்ப
தாமுயி ரின்பின்புள்வருமே,
லென்ற ஞகாரம தாம்பதினை
ந்தொடெண்ணிரண்டாய்த்,
தோன்று முடற்பின் றகாரம்
வரினிரண் டும்மொருகா, லா
ன்றவைந் தாமுட லாமுன்பி
னொற்றுக் கழிவுமுண்டே."

121. தாவரம்—உடம்பு. ககரா—ஓர் ஒலிக்குறிப்பு.

123. செயிர்—குற்றம்.

124. குணிப்பு—மதிப்பு. சோத்தம்—இழிந்தோரஞ்சலி.

125. சூரி—புலவர்.

126. புல்—புலி. தன்னம்—அற்பம்.

127. புதர்—புலவர்.

128. அடைவு — முறைமை. இடையல்—மெலிவு. இரண்டொரு—இருதாரங்கூறி.

130. தோற்றரவு—தோற்றம்.

131. வின்குணம்—நாகரீகம். இன்றகவு—இனியதகுதி.

132. அருட்சத்தி பதிந்த ஆதிசைவரை முதலாகக்கொண்ட வினையர்க்கும்.

133. போதினைத்தொண்டர்—வந்தடியார்கள்.

137. நிறுவிதி—நிறுவியவிதி.

143. முன்னூல்—வேதம்.

152. உகை—வளர்ச்சி. அகை—எழுச்சி.

153. மிருத்திய—ஆணவம்.

155. ஆமோதம்—உவகை.

166. குகனுள் பல்லிடம்—ஆறுபடைவீடுகள்.

கச்சியப்பசிவாசாரியர் புராணம்

அருங்குறிப்பு முற்றிற்று.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# கச்சியப்பசிவாசாரியர் புராண

## வசனம்.

தொண்டைமண்டலத்திற் சிறந்து விளங்காநின்ற கா ஞ்சிபுரத்தின்கண்ணே, ஆதிசைவர் குலத்திலே, கல்விபுரி வொழுக்கங்களினாலுஞ் சிவபத்தி சிவஞானங்களினாலுஞ் சிறப்புற்றோங்கிய காளத்தியப்பசிவாசாரியர் என்பவர் ஒரு வர் இருந்தார். அவர் காஞ்சீபுரத்துள்ள குமரகோட்டத் திருச்சகருள் ஒருவர். அவர் நெடுங்காலம் புத்திரனில்லா மையாற் பெருங்கவலைகொண்டு, புத்திர பாக்கியத்தின் பொருட்டுக் குமரகோட்டத்தின்கண் எழுந்தருளிய பெ ருங்கருணைக்கடலாகிய சுப்பிரமணியக்கடவுளை விதிப்படி சிரத்தையோடும் உபாசித்துக்கொண்டு வந்தார். வரும் பொழுது, அக்கடவுளது திருவருளினாலே, தமிழ்நாட்டார் கள் சுப்பிரமணியபத்தி பெற்றுய்யும்பொருட்டு, அச்சிவா சாரியருக்கு அவருடைய கற்பினிற்சிறந்த பத்தினியாரது அருமைத்திருவயிற்றின் ஒருசற்புத்திரர் திருவவதாரஞ் செய்தார்.

அப்புத்திரருக்குக் கச்சியப்பர் என நாமகரணஞ் செ ய்யப்பட்டது. அவர் ஐந்தாம்வயசிலே வித்தியாரம்பஞ் செயப்பெற்று, சம்ஸ்கிருதம் தமிழ் என்னும் இரண்டுபா ஷைகளையுங் கற்பாராயினர். அன்பு அருள் வாய்மை பொ றை அடக்கம் முதலிய நற்குணங்களெல்லாம் அவரோ டுடன் பிறந்து அவரோடுடன் வளர்ந்தன. அவர் ஏழாம்

வயதிலே உபநயனஞ் செய்யப்பெற்று, வேதாத்தியயனஞ் செய்வாராயினர். சில காலத்தினுள்ளே சமஸ்கிருதத்தில் வேத வேதாங்கங்களையும் தமிழில் இலக்கண இலக்கியங்களையும் கற்று வல்லராயினர்.

அவர் சிவாசாரியரின் சமயதீக்ஷை பெற்று, தமிழ் வேதமாகிய தேவார திருவாசகங்களை ஓதுவாராயினர். அதன்பின் விசேஷதீக்ஷை பெற்றுச் சைவாகமங்களிற் கிரியாகாண்டங்களைக் கற்றறிந்து கொண்டார். அதன்பின் நிருவாணதீக்ஷையும் ஆசாரியாபிஷேகமும் பெற்று, சைவாகமத்தின் ஞானகாண்டங்களை ஓதி, அவற்றின் பொருளையும் தேவார திருவாசகங்களின் பொருளையுங் கேட்டு, அப்பொருள் வேதத்தின் ஞானகாண்டங்களாகிய உபநிடதங்களின் பொருளோடு அபேதமாயிருக்கக்கண்டு, அதனைச் சிந்தித்துத் தெளிந்துகொண்டார்.

இங்ஙனம் தெளிவுற்ற அவர் தம்மிடத்து அடிமைகளாய்க்குழுமி வணங்கிநின்று மெய்யன்புறாஉம் நன்மாணாக்கர்கள் பிறவிப்பிணியின் நீங்கி மேம்பட்ட திருவருள் அடைவதற்குரிய பல அருணூல்களையெல்லாம் அவர்கட்குபதேசித் தமர்வாராயினர்.

இவ்வியல்புடையராய் விளக்கமுற்ற கச்சியப்பசிவாசாரியர்குமரகோட்டத்துச் சுப்பிரமணியக்கடவுளை மெய்யன்போடு பூசைசெய்துகொண்டுவந்தார். ஒருநாட் சுப்பிரமணியக்கடவுள் கச்சியப்பசிவாசாரியருக்குச் சொப்பனத்திலேதோன்றி, “அன்பனே, நீ காந்தபுராணத்தாறு சங்கிதைகளுட் சங்கரசங்கிதையின் முதற்கண்டமாகிய சிவரகசியகண்டத்திலுள்ள நமது சரித்திரத்தைக் கந்த

ராணம் எனப் பெயரிட்டுத் தமிழிலே பெருங்காப்பியமா
 பாடக்கடவாய்" என்று ஆஞ்ஞாபித்து, "திகடசக்
ச் செம்முக மைந்துளான்" என்று அடியெடுத்துக்
கொடுத்து மறைந்தருளினார். உடனே கச்சியப்பசிவாசா
யர் விழித்தெழுந்து, அழலிடைப்பட்ட மெழுகுபோல
நெஞ்சநெக்குருக, உரோமஞ்சிலிர்ப்ப, உரைதடுமாற, கரை
ற்ற இன்பக்கடலின் அழுந்தி, "ஒன்றுக்கும் பற்றாத
புழுத்த நாயினுங் கடையனாகிய தமியேனையும் ஒருபொ
ருட்படுத்து வந்தருளிச்செய்த எம்பெருமானாகிய சுப்பிர
மணியக்கடவுளது பெருங்கருணைத்திறம் இருந்தபடி என்
னை என்னை" என்று ஆனந்தக்கூத்தாடினார்.

மற்றைத்தினத்திலே கச்சியப்பசிவாசாரியர் நித்திய
கரும முடித்துக்கொண்டு, சுப்பிரமணியபூசை செய்தபின்
புராணம்பாட ஆரம்பித்தருளினார். நாடோறும் நூறு
செய்யுள் பாடி, அவை எழுதப்பட்ட ஏட்டையும், எழுத்
தாணியையும், இராத்திரி காலபூசை முடிந்தபின் குமர
கோட்டத்தடிகளுடைய திருவடிக்கீழ் வைத்துவிட்டுத்
திருக்கதவந் திருக்காப்பிட்டுக்கொண்டு தமது திருமாளி
கைக்குப்போவார். பிற்றைநாட்காலையிலே நித்தியகரும
முடித்துக்கொண்டு, பூசையின்பொருட்டுத் திருக்கோயி
லினுள்ளே புகுந்து, ஏட்டை எடுத்துப்பார்த்து, அதிற்
சிலவிடங்களிலே திருத்தப்பட்டிருத்தல் கண்டு, அதனைச்
சிரமேற்கொண்டு ஆனந்தபரவசராய்ச் சிறிது பொழுது
நின்று பின் பூசைசெய்வார்.

இவ்வாறே கச்சியப்பசிவாசாரியர் கந்தபுராணம்பாடி
முடித்தபின், சாலிவாகனசகாப்தம் எழுநூற்றின்கண், அத
னைக் குமரகோட்டத்தில் அரங்கேற்றும்பொருட்டுச் சபையின

முஞ், சுபமுகூர்த்தமும் நிச்சயித்துக்கொண்டு, எங்குமு ள்ள சிவனடியார்களெல்லாருக்கும் பத்திரம் விடுத்தருளி ஞர். ஏவலாளர்கள் திருக்கோயிலையும், திருவீதிகளையும் மிக அலங்கரித்தார்கள். சுட்டப்பட்ட சுபதினத்திலே, திருநெறித்தமிழாகிய தேவார திருவாசகங்களில் வல்ல பெரியோர்களும், சிவாகமவிற்பன்னர்களும், வேதவேதா ங்கபண்டிதர்களும், தமிழ்ப்புலவர்களும், இராசாக்களும், பிரபுக்களும், பிறருமாகிய எல்லாரும் வந்து கூடினார்கள்.

கச்சியப்பசிவாசாரியர் குமரகோட்டத்தடிகளைப்பூசை செய்து, அவர்சந்நிதானத்திலே மெழுகிப் பீடமிட்டு, அதி ன்மேற் பட்டைவிரித்து, புஷ்பங்களைத் தூவித், தூபங் கொடுத்து ஆசனங்கற்பித்து, கந்தபுராணத்திருமுறையை அதன்மேல் வைத்து அருச்சித்து வணங்கித் துதித்தார். பின்பு இருந்துகொண்டு, "திகட சக்கரச் செம்முக மைந் துளான்" என்னும் முதற்செய்யுளை ஒருமுறை வாசித்து, "திகழ் தசக்கரச் செம்முகம் ஐந்து உளான்" என்றெடுத்து "விளங்காநின்ற பத்துத்திருக்கைகளும் செவ்விய ஐந்து திருமுகங்களுமுள்ள சிவபெருமானுடைய" என்று பொரு ளருளிச்செய்தார். உடனே அங்கிருந்த தமிழ்ப்புலவர்க ளுள் ஒருவர் "சுவாமிகாள்! திகழ் தசம் திகடசம் எனப் புணர்தற்கு விதி தொல்காப்பிய முதலிய இலக்கணநூல்க ளுள் ஒன்றிலாயினும் இல்லையே" என்றார். அதற்குக் கச்சியப்பசிவாசாரியர் "தாங்கள் கூறியதொக்கும், ஆயின்

இம்முதலடி என்வாக்கன்று; சங்கப்புலவராகிய சுப்பிரமணியக்கடவுளது திருவாக்கு; அவரே எனக்கு இவ்வடியெடுத்துத் தந்தருளினர்" என்றார். அதுகேட்ட அப்புலவர் புன்முறுவல் செய்து, "சுப்பிரமணியக்கடவுள் சுவாமிகளுக்கு இவ்வடியெடுத்துத் தந்தருளியது சத்தியமாயின் ஆகுக. ஆயினும், அது இரகசியம். அதனை நாங்கள் அங்கீகரிப்பதெங்ஙனம்! அக்கடவுள் சுவாமிகளுக்குத் தோன்றியதுபோல எங்களுக்குந் தோன்றி, "இவ்வடி நாமே எடுத்துக் கொடுத்தருளினேம்" என்று திருவாய்மலர்ந்தருளின் அங்கீகரிப்பேம்; அன்றேல், இதற்கு யாதானுமோரிலக்கணநூலில் விதிகாட்டின் அங்கீகரிப்பேம்; அல்லாக்கால், அரங்கேற்றவொட்டேம்" என்றார். கச்சியப்பசிவாசாரியர் "இவ்விரண்டினுள் ஒன்று நாளைசெயப்படும்" என்றருளிச்செய்து சபையாரைப் போக்கிவிட்டு, அற்றைத் தினத்திலே திருவமுதுசெய்யாது, இராத்திரி காலபூசைமுற்றியபின் திருக்கதவந் திருக்காப்பிட்டுக்கொகொண்டு சந்நிதியிலே தரையிலே சயனித்தருளினார். அப்பொழுது சுப்பிரமணியக்கடவுள் கச்சியப்பசிவாசாரியருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "அன்பனே, சோழதேசத்தில் வீரசோழியம் என்று ஓரிலக்கணநூலிருக்கின்றது; திகழ்தசம் திகடசம் எனப்புணர்தற்கு விதி அந்நூலிற் சந்திபடலத்திற் பதினெட்டாஞ் செய்யுளிலிருக்கின்றது; சோழதேசத்துப் புலவனொருவன் அந்நூலை

நாளைக்கு இவ்விடத்திற்கொண்டுவந்து அவ்விதியை எல்லா ருக்குங்காட்டுவன்" என்று திருவாய்மலர்ந்து மறைந்தரு ளினர்.

மற்றைநாட்சபையாரெல்லாருங் கூடியிருந்தபொழுது கச்சியப்பசிவாசாரியர் தமக்கு முருகக்கடவுள் சொப்பனத் தில் அருளிச்செய்தமையை அவர்களுக்குச் சொல்லியருளி னர். உடனே ஒருபுலவர் ஒருபுத்தகங் கையிற்கொண்டு அங்கே வந்தனர். அவரை அங்குள்ளோர்கள் நோக்கி, "நீர் யாவர்? உமது கையிற்புத்தகம் யாது?" என்று வினு வினர்கள். அதற்கு அப்புலவர் "நாம்சோழதேசத்துள் ளேம்; இப்புத்தகம் வீரசோழியம்" என்றார். அப்பொ ழுது முன்னைநாளின் ஆக்ஷேபித்தபுலவர் விரைந்துசென்று அப்புத்தகத்தை வாங்கிச் சந்திபடலத்திற் பதினெட்டாஞ் செய்யுளை வாசித்துத் திகடசக்கரம் என்னும் புணர்ச்சிக்கு விதி அதிலிருத்தலை உணர்ந்து விம்மிதமும் மகிழ்ச்சியுமுற் றனர். மற்றைத்தமிழ்ப்புலவர்களும் ஒருவர் பின் ஒருவ ராக அதனை வாங்கிப் பார்த்து விம்மிதமும் மகிழ்ச்சியுமுற் றார்கள். இறுதியிலே சோழதேசத்துப் புலவர் அப்புத்த கத்தைக் கச்சியப்பசிவாசாரியர் கையிற் கொடுத்து, சபை யாரெல்லாரையும் நோக்கி, "ஆக்ஷேபம் ஒழிந்ததா ஒழிந் ததா!" என்று சொல்லிவிட்டு மறைந்தருளினர். உடனே கச்சியப்பசிவாசாரியர் தலையாண்டருளிய அறுமுகக் கட வுளது பெருங்கருணைத் திறத்தை நினைந்து நினைந்து, சரீ

ரம் விதிர்ப்புற, மயிர்க்காற்றேறும் இவலே உண்டாக, என்பெல்லாம் நெக்கு நெக்குருக, மதகிடைப் புறப்படுஞ்சலம்போல ஆனந்தபாஷ்பம் பொழியப் பரானந்த பரவசராய் எழுந்தருளியிருந்தார் அப்பொழுது சபையார் எல்லாரும் "இங்ஙனம் எழுந்தருளிவந்தபுலவர்குமாரக்கடவுளே" என்று துணிந்து ஆச்சரியமடைந்து, வெயிலிடைப்பட்ட வெண்ணெய்போல மனங்கசிந்துருக உரோமஞ்சிலிர்ப்பக் குறுவேர்வைகொள்ள ஆனந்தவருவிசொரிய ஆனந்தக்கூத்தாடிக் கச்சியப்பசிவாசாரியருடைய பெருமையை நன்குணர்ந்து, அவர் திருவடிகளில் அடியற்ற மரம்போல் விழுந்து நமஸ்கரித்து அவரைத் தோத்திரஞ் செய்தார்கள். ஆக்ஷேபஞ்செய்த புலவர் கச்சியப்பசிவாசாரியரைப் பலதரமும் நமஸ்கரித்து, "எம்பெருமானே, புழுத்தநாயினுங் கடையேனாகிய தமியேன் சுவாமிகளுடைய மகிமையைச் சிறிதும் அறியாது ஆக்ஷேபித்த பெருங்குற்றத்தைப்பொறுத்து அடியேன்மீது திருவருள் சுரந்தருளுக" என்று அதிவிநயத்தோடு பிரார்த்தித்து, மீட்டும் அடியற்ற மரம் போல் வீழ்ந்து கிடந்தார். கச்சியப்பசிவாசாரியர் எழுந்து, அப்புலவருடைய இரண்டுகைகளையும் தம்முடைய அருமைத் திருக்கைகளினாலே பற்றியெடுத்து இறுகத்தழுவி, "ஐயரே, தங்கள் ஆக்ஷேபத்தினாலன்றோ இச்சபையாரெல்லாருக்கும் திருவருளினுண்மை வெளிப்பட்டது. இதன் பொருட்டுத் தங்களுக்குச் செயற்பாலதாகிய கைம்மாறு யாது! அறியேம் அறியேம்" என்று பாராட்டியருளினர்.

அதன்பின் சபையாரெல்லாரும் நமஸ்கரித்து, "சுவாமிகாள், இனி இப்புராணத்தைத்தடையின்றி அரங்கேற்ற ஆரம்பித்தருளுக" என்றுவிண்ணப்பஞ்செய்தார்கள். அங்ஙனமே கச்சியப்பசிவாசாரியர் அரங்கேற்றுவாராயினர். காஞ்சித்திருநகரத்துள்ள ஆதிசைவர்கள் முதலானவர்களுக்கும் கந்தபுராணங்கேட்க வந்த எண்ணிறந்த அடியார்களுக்கும் போசனமுதலியவைகளெல்லாம் தொண்டைநாட்டுள்ள இருபத்துநான்குகோட்டத்து வேளாளப்பிரபுக்களுடைய செலவினாலே நடந்தன. எல்லாரும் நியமமாக வந்து பேராசையோடுகேட்கக் கச்சியப்பசிவாசாரியர் தினந்தோறும் புராணம் வாசித்துப் பொருள்சொல்லி ஒருவருஷத்திலே முடித்தருளினர்.

புராணமுற்றுப்பெற்றவுடனே கச்சியப்பசிவாசாரியர் புராணத்திருமுறையை விதிப்படி அருச்சனை செய்து நமஸ்கரித்தார். அப்பொழுது அங்குள்ள எத்திறத்தார்களும் அன்பினோடு விம்மிவிம்மித் தண்டாகாரமாக விழுந்து, கச்சியப்பசிவாசாரியரை நமஸ்கரித்தெழுந்து இரண்டு கைகளுஞ் சிரசின்மேலேறிக் குவிய நின்று, துதித்தார்கள். கச்சியப்பசிவாசாரியர் கந்தபுராணத்திருமுறையோடுந் தந்தச்சிவிகையில் எழுந்தருளி, இருபத்துநான்கு கோட்டத்துமுள்ள வேளாளப்பிரபுக்களுள்ளே சிலர் சிவிகை தாங்க சிலர் வெண்சாமரம்வீச சிலர் குடை கொடி பிடிக்க, நானாவித மங்கல வாத்தியவொலியினாலே திக்குகளெல்லாஞ்

செவிடுபட, பிராமணர்கள் வேதகோஷஞ்செய்ய, சிவனடியார்கள் சரவணபவ சரவணபவவென்று சொல்லும் பேரொலிதழைக்க, திருநகரவாசிகள் திருவீதிகடோறும் சுத்திசெய்து வாழைகள் நாட்டித் தோரணங்கள் நிறைத்துப் பூமாலைகள் தூக்கிப் பூரணகும்பங்கள் வைத்துப் பொரிதூவித் திருவிளக்கேற்றி அறுகெடுக்க, தமது அருமைத் திருமேனியிலே தரிக்கப்பட்ட திரிபுண்டரத்தின் அழகையும், உருத்திராக்ஷமாலைகளின் அழகையும், சின்முத்திரையும், திருக்கண்களினின்றும் பொழியும் பரமானந்த வாரியையும், அடியார்கள் கண்டு மனநெக்கு நெக்குருக வணங்கித் துதித்து ஆனந்தக்கூத்தாட, திருவீதிவலஞ்செய்து, குமரகோட்டச்சந்நிதியை அடைந்து, சிவிகையினின்றும் இறங்கித் திருமுறையைத் திருக்கோயிலினுள்ளே கொண்டுபோய்த் திருமுன்னே வைத்தருளினர். உடனே எல்லாரும் கச்சியப்பசிவாசாரியரை, அவர் "அமையும் அமையும்" என்றவழியும் தவிராது, ஆராமையினாலே பலகாலும் நமஸ்கரித்து, "பரமகருணாநிதியாகிய எம்பெருமான் தமிழ் நாட்டாரெல்லாரும் பிழைக்கும்பொருட்டுத் திருவாய்மலர்ந்தருளிய இப்புராணமாகிய திவ்வியாமிர்தத்தை அடியேங்கள் எஞ்செவிவாய்மடுத்துஉய்ந்தனம் உய்ந்தனம்" என்று விண்ணப்பஞ்செய்து இன்பமுற்றார்கள்.

தமிழ் நாடெங்குமுள்ள சிவனடியார்களெல்லாரும், இக்கந்தபுராணத்தை மிகப்பாராட்டி, சிரத்தையோடு எழுதுவோரும், வாசிப்போரும், பொருள்சொல்வோரும், கேட்போருமாய், இதன் சொற்சுவை பொருட்சுவைகளை அநுபவித்துப் பேரானந்தப்பெருஞ்செல்வம் அடைந்தார்கள்.